## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
## கொழும்பு மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 நவம்பர் மாதம் 03 ஆம் திகதி உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 80,085,000 பெறுமதியான 14 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கொழும்பு நகரத்திற்கு அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்ட 14 வாகனங்கள் சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமையினால் இந்த வாகனங்களை கையேற்று 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். |
| (ii) | ரூபா 181,493,058 பெறுமதியான நிலையான வைப்பு மீதி நிதக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | திரவத்தன்மை அடிப்படையில் 05 ஐந்தொகையில் சொத்துக்கள் ஒழுங்குபடுத்தி வைக்கப்படல் வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியாகப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,700,000 தொகையான இசுசு சிறிய ரக கெப் வண்டி மூலதனமாக்கப்படவில்லை. | சொத்துக்களை கையேற்று மூலதனமாக்கப்பட வேண்டும். | WP PI- 0511 என்ற இசுசு சிறிய ரக கெப் வண்டியும் இதுவரையிலும் இந்த சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2019 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 2008 - 2012 காலப்பகுதியில் சபையினால் கைப்பற்றப்பட்ட ரூபா 405,000 பெறுமதியான 03 டேலர்கள் மற்றும் ரூபா 900,000 பெறுமதியான டெக்டர் என்பன மூலதனமாக்கப்படவில்லை. | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 03 டேலர்கள் மற்றும் டெக்டர் 2019 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு இலக்கம் 02 இன் கீழ் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (v) | பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்து சபையின் நேர் ஊழிய அடிப்படையின் கீழ் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 16 வேலைகளுக்குரிய ரூபா 3,354,848 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | ஆண்டிற்குரிய செலுத்தவேண்டிய செலவினங்களுக் காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் ஏற்பாட்டை ஒதுக்குதலில் ஏற்பட்ட தவறை 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியமையின் காரணமாக ஜனஜயசிட்டி கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய வட்டிக் கட்டணம் மற்றும் மேலதிக கிரயம் ரூபா 130,736,933 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் செலத்த வேண்டிய ரூபா 130,736,933 தொகையை செலுத்துதல் ஆலோசனை சேவை நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்படாதிருந்தமையால் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (vii) | ஜயரஜசிட்டி சந்தை கட்டிட தொகுதியின் கடைகள் முன்விற்பனை அடிப்படையில் முதலீட்டாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 158,178,354 தொகை ஜயரஜசிட்டி கட்டிட தொகுதி நிர்மாணித்தல் நிறுத்தப்பட்டமையின் காரணமாக வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய பொறுப்பாக | பொறுப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போதும் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையை தீர்த்து வைத்ததன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால் இதனை வெளிதரப்பினருக்கு செலுத்த வேண்டிய பொறுப்பாக கருதி |

| | | |
|---|---|---|
| கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை. | | கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதிக்கும் பட்டோலைகளில் காணப்படுபின்ற மீதிக்கும் இடையே ரூபா 1,786,634 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளை ஒப்பீடு செய்து சரி செய்வதற்கு நடடிக்கை எடுக்கப்படும். | இந்த வேறுபாடு 2010 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுவதாகும். அனேகமாக பழைய கடன் பதிவேடுகள் மற்றும் உரிய தகவல்கள் அழிவடைந்திருந்ததுடன் முடியுமான பதிவேடுகளை ஒப்பீடு செய்து இதில் இனங்காணாத கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 02 சினிமா மண்டபங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,781,680 தொகையான விநோதவரிப் பெறுமதி பல வருட காலத்திலிருந்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கோ அல்லது உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | விநோதவரியை மீளளிப்பு செய்தல் அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படாதிருந்தமை திறைசேரியிலிருந்து அறிவிக்கப்பட்டதுடன் உள்ளுராட்சி ஆணையாளரினாலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளளிப்பு செய்யப்படாத ரூபா 2,781,679 தொகையை பதிவழிக்கும் நடவடிக்கைக்காக அறிவித்து உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 ஆம் ஆண்டிற்குரிய உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் வட்டி ரூபா 254,402 தொகை மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் வட்டி மீளளிப்பு செய்யப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ஆதன கடன் வட்டி ரூபா 255,248 தொகையை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்ததாக உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்திருந்தது. |
| (iii) | வெளித்தரப்பினருக்கு விநியோகிக்கப்பட்ட ''அசிரிமத் கோடடே'' 30 நூற்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 51,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அல்லது புத்தகங்களை தாமதமின்றி சபைக்குப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | அரசாங்கத்தின் அச்சகத்திலிருந்து ''அசிரிமத் கோடடே'' என்ற புத்தகத்தின் 3921 பிரதிகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. அதில் எமது சபைக்கு 3891 புத்தகங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. மிகுதி 30 புத்தகங்களும் கலாசார பேராசிரியர் தர்மரத்ன ஹேரத் அவர்களினால் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக சபைக்கு கிடைக்கவேண்டிய பணத்தை செலுத்துமாறு அல்லது மீள சபைக்கு கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 461,701,101 தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள் மற்றும் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக ஏற்றுக்கொள்ள / சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய தகவல்களை கண்டறிந்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 48 ஈம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் | ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் அசையாத ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019.07.02 ஆம் திகதி கௌரவ நகராதிபதியின் பங்களிப்புடன் மதிப்பீட்டு திணைக்களத்தின் உத்தியோகத்தருடன் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டதுடன் அதில் அவர்கள் 2019 ஆகஸ்ட் மாதம் முதல் புதிய மதிப்பீட்டை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டின் போது 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 400,064 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | இந்த முற்பணத் தொகையை மிக விரைவில் தீர்த்து வைப்பதற்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 07 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 676,800 தொகையான வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 1997 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை பெறப்படாத வைப்புக்கள் இதுவரையிலும் சபையின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 05 வருடங்கள் இதுவரை பெறப்படாத வைப்பு மீதிகள் தொடர்ந்தும் தேவையற்றது என உறுதிப்படுத்திய பின் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சமர்ப்பித்து சபை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 1642 | 2018 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக பொலிஸிற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | 2016 நவம்பர் 09 ஆம் திகதி LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கை | கடை வாடகை 03 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மதிப்பீட்டு திணைக்களத்தால் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட 2019.06.26 ஆம் திகதிய CM/KMC/நானாவித/2019 இலக்க கடிதத்தின் பிரகாரம் மதிப்பீட்டுக்கு தேவையான அறிக்கை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 333,399,607 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 248,629,914 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 222,000,000 | 237,433,234 | 211,577,509 | 101,507,737 | 212,000,000 | 238,345,909 | 243,444,275 | 87,657,889 |
| (ii) | வாடகை | 65,053,000 | 29,562,074 | 29,302,712 | 5,522,091 | 57,609,000 | 29,283,412 | 29,618,519 | 4,541,197 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,361,000 | 6,715,639 | 6,715,639 | - | 5,961,000 | 6,236,406 | 6,236,406 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 379,542,000 | 468,558,207 | 466,230,979 | 3,425,777 | 368,458,000 | 334,748,201 | 334,461,957 | 1,074,055 |
| | மொத்தம் | 672,956,000 | 742,269,154 | 713,826,839 | 110,455,605 | 644,028,000 | 608,613,928 | 613,761,157 | 93,273,141 |

### 2.2.2 ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதன வரிப் பெறுமதி ரூபா 50,000 தொகையை விஞ்சியிருந்த வீடுகள், வெற்றுக்காணிகள் மற்றும் 224 வியாபார நிலையங்களில் இருந்து ரூபா 24,361,203 தொகை அறவிட வேண்டி இருந்தது. | நிலுவை ஆதன வரியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவை ஆதன வரி மீதியை அறவிடுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது பிடியாணை விநியோகித்தல், சிவப்பு அறிவித்தல் விநியோகித்தல், ஆதனங்களை தடை செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 சந்தைத் தொகுதிகளில் இருந்தும் மற்றும் நுகேகொட பொதுச் சந்தையிலிருந்தும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,463,411 தொகையான நிலுவை வாடகை காணப்பட்டது. | நிலுவை வாடகையை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்குரிய சந்தைத் தொகுதிகளில் 2018.12.31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகையில் 2019.06.30 வரை ரூபா 974,829 தொகை அறவிடப் பட்டுள்ளது. |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 226(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட ரூபா 24,582,843 பெறுமதியான 14 மிகைக் கட்டணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு இருந்தது. | சகல மிகை கட்டணங்கள் தொடர்பாகவும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையில் ரூபா 549,000 தொகையான இரண்டு மிகைக் கட்டணத்திற்கு பணம் செலுத்தப்பட்டதுடன் ரூபா 310,000 தொகையான மிகைக் கட்டணத்திற்காக பணம் செலுத்தப்படுகின்றது. மிகுதி மிகைக் கட்டணங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) கைவிடப்பட்ட இலக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கைவிடப்பட்ட இலக்குகள் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மாநகர சபை வேலை பிரிவு, வாகன பராமரிப்பு பிரிவு மற்றும் களஞ்சிய கட்டிடத் தொகுதி என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 17,651,987 தொகை செலவிடப்பட்ட போதும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்த்த பெறுபேறுகள் பெறப்படாது கைவிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தை நிறுத்துமாறு பொதுமக்களினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பின் காரணமாக செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. தற்போது அதில் விளையாட்டு அரங்கொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன். முன்னைய செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரும் புதிய செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இணங்கி இருந்தார். அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 17,651,987 தொகையிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ii) | 2018 பாதீட்டின் மூலம் பொதுமக்கள் நலன்புரி சேவைகளுக்காக 03 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 3,750,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த சேவை முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிதி ஏற்பாட்டை ஒதுக்கும் போது உரிய ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தை அடிப்படையாக கொள்ள வேண்டும். | பாதீட்டை தயாரிக்கும் போது முன்னைய ஆண்டினை அடிப்படையாக கொண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் உரிய பொதுமக்களின் நலன்புரி சேவைகளுக்காக கொடுப்பனவு செய்தல் சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற இடரான நிலைமையின் அடிப்பயில் மேற்கொள்ளப்படுகின்றது. சமய நடவடிக்கைகள், நலன்புரி உதவிகள் மற்றும் முதியோர் அமைப்புக்களுக்காக உதவிகளை வழங்கும் போது மதத் தலங்கள் மூலம் அல்லது முதியோர் அமைப்புக்களின் கோரிக்கையின் அடிப்படையில் நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 சனவரி 04 ஆம் திகதி மற்றும் 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 682 மில்லியன் தொகையான இரண்டு செயற்திட்டங்கள் 2019 யூன் 24 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி கோவையின் நியதிகள் பின்பற்றப்பட வேண்டும். | மொரகஸ்முல்ல மற்றும் அங்கம்பிட்டிய வீடமைப்புத் தொகுதி இரண்டினதும் நிர்மாண நடவடிக்கைகள் Electro Metal Pressing (PVT) Ltd நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டமையால் அங்கம்பிட்டிய வீடமைப்புத் தொகுதியில் உள்ள வெடிப்புக்களின் காரணமாக அந்த நிறுவனம் கறுப்பு பட்டியலில் இடப்பட்டமையால் மொரகஸ்முல்ல வீடமைத்தொகுதியிலும் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. நகர சபையின் நேர் ஊழியத்தின் கீழ் இந்த செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜயரஜசிட்டி கட்டிடத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பில் உள்ள வழுக்களின் காரணமாக செயற்திட்டம் |

| | | |
|---|---|---|
| | | நிறுத்தப்பட்ட போதும் இந்த செயற்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்து புதிய செயற்திட்டமாக நீண்டகால வாடகை அடிப்படையின் கீழ் அந்த ஒப்பந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. |

(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) தெற்கு வலையத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் தெற்கு வலயத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 2018 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்துக்குரிய ரூபா 94,354,293 தொகை தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| * ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரர் சுத்தம் செய்யவேண்டிய 444 வீதிகள் உள்ளடக்கப்பட்ட போதும் அது சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வீதிப் பதிவேடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. அந்த வீதிகளை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான ஒப்பந்தகார சங்கத்தின் மேற்பார்வையாளரினாலும் சபையின் சுகாதார | சரியான பதிவேடொன்றை தயாரித்து கொடுப்பனவு செய்வதற்கு கண்காணித்துக் கொள்ள வேண்டும். | வீதிப் பதிவேட்டை தயாரிக்கும் போது நகர பொறியியல் பிரிவின் வீதி பதிவேடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய கேள்வி நடவடிக்கைகளைச் செய்யும் போது பெருந்தொருக்கள், மாகாண வீதிகள், நகர சபை வீதிகள் மற்றும் சில தனியார் வீதிகள், அண்மைக்காலத்தில் சபைக்கு கையேற்கப்பட்ட மீதிகள் மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் என்பன இந்த வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சேவைகள் வழங்கப்படாத வீதிகளைப் பரீட்சித்து அதன் பிரகாரம் கட்டணத்தைக் |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதகரினாலும் வீதிகள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஒப்பந்தகாரரால் நாளாந்தம் வீதிகளை சுத்தம் செய்வதற்காக போதியளவான ஊழியர்களின் எண்ணிக்கை ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் வீதிகள் கூட்டப்பட்டு சுத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| * | ஒப்பந்த உடன்படிக்கை 31 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருட்களை சேகரித்தல், வீதிகளைக் கூட்டி சுத்தப்படுத்துதல், தூசுகளை அகற்றுதல் போன்றவைகள் ஒப்பந்தகாரரினால் உரியவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தமை சபையின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக அறிக்கை இட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தெற்கு வளயத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக பொது சுகாதார பரிசோதகர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான அறிக்கை மற்றும் முறையான உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| * | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 100(1) இன் பிரகாரம் சபையினால் பிரதேசத்தில் வடிகாண்கள் சுத்திகரிக்கப்படாதிருந்ததுடன் வடிகாண்கள் தொடர்பாக சபைக்கு கிடைத்துள்ள பொதுமக்களின் முறைப்பாடுகளில் 75 சதவீத்தை விட அதிகமான அளவு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறை மற்றும் பொது மக்களினால் முறையற்ற வகையில் அகற்றப்படுகின்ற கழிவுகள் நகர சுகாதார அலகுக்குச் சொந்தமான ஊழியர்களின் ஊழியம் மற்றும் இயலுமை உச்ச அளவில் பயன்படுத்தி செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்படும். |

(ii) வடக்கு வலயத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையின் வடக்கு வலயத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ஊழியர் சம்பளம் மற்றும் மேலதிக நேரம் வாகனங்களை பழுதுபார்த்தல், எரிபொருள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றும் கட்டணமாக ரூபா 97,984,639 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| * | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 மே மாதம் LGD/03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாணத்தில் உருவாகின்ற கழிவுகளை போதியளவு உள்ளூராட்சி நிறுவனங்களினால் சேகரிக்கின்ற கழிவுகளைக் குறைப்பதற்காக சேகரிக்கப்படுகின்ற சகல கழிவுகளும் 100 சதவீதமும் தரம் பிரிக்கப்பட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கழிவுப் பொருட்களை தரம் பிரிக்கும் சரியான முறைமையொன்றை அறிமுகப்படுத்தி பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுகளை தரம் பிரித்து நகர சபை வாகனத்திற்கு வழங்குமாறு பொது மக்களுக்கு அறிவிக்கும் துண்டுப்பிரசுங்கள் அச்சிடப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஏதாவது சந்தர்ப்பத்தின் போது உக்கும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் கலந்து வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது சபையின் மூலம் அந்த கழிவுப் பொருட்களை எடுத்துச் சொல்லாமலிருப்பதற்கு சபையின் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது 100 சதவீத கழிவுகளும் தரம் பிரிக்கப்பட்டு பெற்றுக் கொள்வதற்கு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| * | மேலும் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 10 பேர்ச் இற்கு மேற்பட்ட காணி அளவைக் கொண்ட உரிமையாளரின் வீடுகளில் இருந்து உக்கும் கழிவுகளை | முறையான பிரகாரம் பின் தொடர் செயற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். | நகர சபையின் சுகாதாரப் பிரிவில் சகல சுகாதார பிரச்சினைகளையும் பரீட்சிப்பதற்காக ஒரு சுகாதார பரிசோதகர் இருந்தமையால் அவருக்கு சகல பரிசோதனைகளையும் |

| | | |
|---|---|---|
| கூட்டுப்பசளைக்காக ஈடுபடுத்துமாறு சபையினால் எழுத்து மூல துண்டுப் பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்வதற்கு காலம் போதாத நிலைமையொன்று ஏற்பட்டமையால் பின்தொடர் நடவடிக்கைகளை செய்கின்ற சந்தர்ப்பங்களின் போது பரீட்சிக்காமல் அதற்காக உரிய ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| * அந்த சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் சகல உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் மாதாந்தம் கழிவுப் பொருள் சந்தையொன்றை நடாத்த வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக கழிவு சந்தையொன்று இரண்டு தடவை நடத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் கழிவுப் பொருள் அதிகார சபைக்கும் அனுப்பவேண்டிய அறிக்கை அனுப்பப்பட்டிருக்கவில்லை | உரிய கழிவுப் பொருள் சந்தை முறையான பிரகாரம் நடத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் இரு தடவைகள் கழிவுப் பொருள் சந்தை நடாத்துவதற்கு பொதுமக்களுக்கு அறிவித்திருந்த போதிலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக எந்தவொரு வாடிக்கையாளரும் வருகை தராமையினால் வருமானம் பெறப்படாதிருந்ததுடன் அது தொடர்பான அறிக்கை அனுப்புதலும் இடம் பெற்றிருக்கவில்லை. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அமுல்படுத்தப்படல் வேண்டும். | இந்த செயலமர்வுகளுக்காக மாநகர சபை உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்ததுடன் 2030 இன் நிலைபேறான திட்டத்தின் வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்காக சபைக்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அங்கீகாரத்தின் பின்னர் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தீயணைப்பு சேவைக்காக கடுவெல, கொட்டிக்காவத்தை. ஹோமாகம, சீத்தாவக்க உள்ளூராட்சி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யப்படாமையினால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,125,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படல் வேண்டும். | தீயணைப்பு சேவை உதவியினை பெற்றுக் கொள்ளும் வகையில் உடன்படிக்கை செய்வதற்காக அந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 2018.09.21 வரையிலும் தமது இணக்கப்பாட்டை அறிவிக்குமாறு குறிப்பிட்டு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உடன்படிக்கை இதுவரை செய்யப்படவில்லை. |
| (ஆ) | நிலையற் குழு முன்மொழிவின் பிரகாரம் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 75 உத்தியோகத்தர்களுக்கு கடமை நடவடிக்கைகளுக்காக சபையிலிருந்து வழங்கப்பட்ட மொபிடல் இணைப்புடன் 75 கையடக்க தொலைபேசிகளுக்காக தொலைபேசிக் கட்டணமாக ரூபா 223,623 தொகை உரிய உத்தியோகத்தர்களின் அல்லது ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு தொலைபேசி வழங்குதல் தொடர்பாக விநியோகிக்கப்பட்டுள்ள சட்ட விதி பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | இந்த தொலைபேசி இணைப்புக்காக ஒருவருக்காக ஆகக்கூடியது ரூபா 500 ஆன மாதாந்த கட்டணம் மாத்திரமே வழங்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக வருகின்ற கட்டணங்கள் தொலைபேசியை பயன்படுத்துபவர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்படுகின்றது. |
| (இ) | 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,825,375 தொகை செலவில் அச்சிடப்பட்ட “அசிரிமத் கோட்டே” என்ற பெயருடைய 4000 நூல் பிரதிகளில் 2019 ஏப்ரல் 23 ஆம் திகதி 3119 புத்தகங்கள் மற்றும் ரூபா | புத்தகங்களை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். | களஞ்சியத்தில் எஞ்சியுள்ள “அசிரிமத் கோட்டே” நூற்கள் கல்வி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற பாடசாலையின் நூலகங்களுக்காக வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 65,325 பெறுமதியான அந்த புத்தகங்களின் 875 புத்தகங்களின் மேலுறைகள் களஞ்சியத்தில் இருப்பாக இருந்தமையினால் புத்தகங்களை அச்சிடும் நோக்கமான சபையினால் காண்பிக்கப்பட்ட ‘‘கோட்டே வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு முக்கியத்துவம் உடைய வரலாற்று ஆசிரியர்களுக்கும் பொதுமக்களினதும் கைகளுக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க சம்பவங்களை கையளித்தல்’’ என்ற நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | நடப்பாண்டின் போது சபை நிதியத்திலிருந்து நேர் ஊழிய அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கோவைகள் பராமரிக்கப்படாதிருந்ததுடன் வேலை அத்தியட்சகர் மற்றும் உரிய வேலைக்குப் பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு முற்பணம் பெற்று அந்த உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட முற்பணத்தை விஞ்சிய | வேலைகளை நிறைவேற்றும் போது பொருட்களை கொள்வனவு செய்யும் போதும் பெறுகை வழிகாட்டிக்கோவை பின்பற்றப்பட வேண்டும். | நடப்பாண்டின் போது வேலைகளில் அதிகமானவை நேர் ஊழிய அடிப்படையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது அவசர மற்றும் அத்தியவசியமானது என முன்னுரிமை வழங்கி துரிதமாக பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறான அவசர மற்றும் அத்தியவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் எல்லை மீறியும் உத்தியோகத்தர்களினால் முற்பணம் பெறப்பட்டிருந்த போதும் அதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முற்பணத்தை பயன்படுத்தி வெளியில் பொருட்கள் கொள்வனவு செய்யும் போது அத்தியவசியமான பொருட்கள் ஆகக் குறைந்த அளவில் |

| | | |
|---|---|---|
| செலவினங்களுக்காக உத்தியோகத்தர்களினால் தமது செலவினங்களையும் செய்யப்பட்டதாக கணிசமாக தொகை சபையிலிருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் போது சபையின் வழங்கல் பிரிவு மற்றும் பிரதான களஞ்சியம் ஊடாக பொருட்கள் கொள்வனவு செய்யப்படாமையினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் தொடர்பாக இருப்புக் கட்டுப்பாடு மற்றும் அந்த சபைகளின் அந்த பொருட்களின் கிரயத்தின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | | பெற்றுக் கொள்ளப்பட்டமையால் மிகை மூலப்பொருட்கள் களஞ்சியத்தில் மிகுதியாக இருக்கவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் உள்ளபடியான பதவியணியினரில் 62 வெற்றிடங்களும் மிகையில் 37 பேரும் காணப்பட்டனர். | பதவி அணி அறிக்கையினை நாளது வரையாக்கி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு உள்ளுராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்), உள்ளுராட்சி செயலாளர் (மேல்மாகாணம்) மற்றும் பிரதம செயலாளர் (மேல்மாகாணம்) ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர் இதுவரையிலும் அனுப்பப்படாதிருந்துடன் முகாமைத்துவ செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக கணக்காளர், சட்ட உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதிவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தனர். |

(ஆ) ஊழியர் கடன்

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடம் மாற்றலாகிச் சென்ற, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 122 ஊழியர்களிடமிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 930,468 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை 359,115 தொகையும் மற்றும் 05 வருடங்களுக்கு குறைவான நிலுவை ரூபா 868,147 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,157,730 தொகை அறவிட முடியாதுள்ள ஊழியர் கடன் மீதியில் காணப்பட்டது. | நிலுவை ஊழியர் கடன் மீதியை இனங்கண்டு உரிய ஊழியர்களிடமிருந்தும், பிணைகாரர்களிடமிருந்தும் மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்தும் அறவிடப்பட வேண்டும். | கடனை அறவிடுவதற்காக கடன் பெற்ற ஊழியர்களுக்கு கடிதம் மற்றும் மீள் நினையூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக தகவல்கள் இதுவரையிலும் ஆராயப்படுவதுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

---------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வாகன அணியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,900,000 தொகையான 05 உடைந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடைந்த வாகனங்களை அகற்றுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 வருடங்கள் அளவிலான காலத்திற்கு முன்னிருந்து சபைக்குரிய அருநோதய மாவத்தையில் அமைந்துள்ள காணி, நிர்மாணிக்கப்பட்ட சனசமூக மண்டபக் கட்டிடம் என்பவற்றை புனரமைக்காமல் அழிவடைந்த நிலையில் காணப்பட்டது. | உரிய கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தக் கட்டிடம் தற்போது உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் புதிய செயற்திட்ட முன்மொழிவொன்று சபைக்கு சமர்ப்பிக்கும் நோக்கில் தற்போது அதன் கூரையில் ஓடுகள் அகற்றப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 கல்வியாண்டிற்காக பாடசாலை மாணவர்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 192,746 பெறுமதியான 7135 பயிற்சிப் புத்தகங்கள் எந்தவிதப் பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் அழிவடையும் நிலையில் காணப்பட்டது. | பயிற்சி புத்தகங்கள் அழிவடைவதற்கு முன்னர் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டுக்காக பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக புத்தகங்களுக்கு கட்டளையிடும் போது 2016 ஆம் ஆண்டில் எஞ்சி இருந்த புத்தகங்களின் அளவு எவ்வளவு எனப் உள்ளடக்கப்பட்டு மிகுதி அளவிற்கு மாத்திரம் புத்தகங்கள் கட்டளையிடப்பட்டிருந்தது. அந்தப் புத்தகங்களும் கட்டாயமாக 2019 ஆம் ஆண்டிற்காக பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் பகிர்ந்தளிக்கும் போது பயன்படுத்தப்படும் என்பதை குறிப்பிடுகிறோம். |

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கம்பிட்டிய வீடமைப்புத் தொகுதி நிர்மாணம் | | |
| சபையினால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 48,320,909 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி வீட்டுத்தொகுதி 2016 ஆம் ஆண்டு வரையில் சுவர் மற்றும் சிலப் தட்டுக்கள் வெடித்திருந்தமை குடியிருப்பாளர்களினால் சபைக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் குடியிருப்பாளர்கள் அந்த கட்டிடத்தில் இருந்து விலகி தற்காலிக இடத்துக்கு சென்றிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவக் குழு தீர்மானத்தின் அடிப்படையில் வீட்டுத்தொகுதியை நிர்மாணித்தல் தொடர்பாக தரப்பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,016,261 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மேற்கூறப்பட்ட கட்டிட நிர்மாணத்திற்கான மொத்தக் கிரயம் ரூபா 49,337,170 செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையை மீறியமை மற்றும் பொறுப்பின்றி | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் அங்கீகரித்த கேள்வி நடைமுறைகளை பின்பற்றி தெரிவு செய்யப்பட்ட Electro Metal Pressing (PVT) Ltd. நிறுவனத்துடன் பெறுமதி சேர் வரியின்றி ரூபா 40,823,485 தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கொள்ளப்பட்ட மண் பரிசோதனையின் போது திட்டத்தின் அத்திவார அளவு போதியளவில் இல்லாமையினால் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 20 சதவீத மேலதிக தொகை ஒன்று இந்த பணியை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு சபை அங்கீகாரம் பெறபட்பட்டிருந்தது. 2016.04.10 ஆம் திகதி வரையிலும் நகர சபைக்கு கையளிக்கப்பட்டு குடியிருப்பாளர்கள் அதில் குடியிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் வரையிலும் வீடுகளின் சுவர் சிலப் தட்டு வெடித்திருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கை மற்றும் திட்ட வடிவமைப்பின் பிரகாரம் புதிய பாதுகாப்பு கட்டொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஏற்பட்ட நட்டம் தொடர்பாக மற்றும் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக அந்த ஒப்பந்தகார நிறுவனத்துக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பட்டமை தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபைக்குரிய சந்தையின் பெறுமதி ரூபா 7,000,000 பெறுமதியான கெப் வண்டி 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி சபையின் பொறுப்பில் இருந்து அகற்றப்பட்டு மேல் மாகாண ஆளுனரின் செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துவதற்கு கையளிக்கப்பட்டதுடன் 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ஆளுனரின் செயலாளர் தனிப்பட்ட வீட்டு வளவில் தீ பிடித்து அழிவடைந்திருந்தது. தீ பிடிக்கப்பட்ட சிறிய எரிபொருள் வகையொன்று சேர்ந்து வாகனம் தீ பிடித்ததாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்கு ஏற்பட்ட நட்டம் உரிய தரப்பினரிடமிருந்து தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் இறுதி அறிக்கையின் பிரகாரம் அந்த வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரான ஆளுனரின் செயலாளர் மற்றும் வாகனத்தின் சாரதி எஸ்.ஏ.டீ. உமேஸ் துனிஸ்க என்ற அவருக்கு மேற்கூறப்பட்ட விபத்து தொடர்பாக பொறுப்பு கூற வேண்டியிருந்ததாக சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன். அந்த அறிக்கையின் மிகுதி நடவடிக்கைகளுக்காக 2019.01.14 ஆம் திகதி மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் ஆளுனரின் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.7 பெறுகை

### 3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நுகேகொட கங்கொடவில சுபாத்ராம அதுல ரஜமகா விகாரைக்குரிய காணியில் வாசிப்பு மண்டபத்துடன் சேவை நிலையத்தை நிர்மாணித்தல். | | |
| நுகேகொட கங்கொடவில சுபாத்ராம அதுல ரஜமகா விகாரை நிலையத்துக்குரிய 24.35 பேர்ஷ் காணியில் வாசிப்பு மண்டபத்துடன் சேவை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக சபையினால் 2015 மார்ச் 15 முதல் 2050 மார்ச் 14 ஆம் திகதி வரை 35 வருட காலத்துக்கு குத்தகை அடிப்படையில் காணியொன்று பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக 2015 ஏப்ரல் 15 ஆம் திகதி ரூபா 1,000,000 தொகை மற்றும் 2015 ஏபடரல் 29 ஆம் திகதி ரூபா 680,000 தொகையும் ஆக ரூபா 1,680,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணியில் சமூக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 17,272,350 தொகை இல் 2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதி தனியார் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. காணியின் மண் பரிசோதனை ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் காணியின் மண் பரிசோதனை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2015 நவம்பர் 26 ஆம் திகதி ரூபா 273,615 தொகை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தகாரர் நிர்மாண ஒப்பந்தத்தை கைவிட்டுச் சென்றமையினால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,953,615 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ஆதனங்களுக்கு மக்களுக்கு சேவையினை வழங்கும் வகையில் பயன்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காணியின் வணிகப் பெறுமதி உயர்வடைந்து சென்றமையினால் உரிய வாடகைப் பணத்தை செலுத்தி நகர சபைக்கு உரித்தை உறுதிப்படுத்தி கொண்டதுடன் அந்த இடத்தில் பல்நோக்கு நடவடிக்கைகளுக்காக மூன்று மாடி கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) ஜயரஜசிட்டி செயற்திட்டம்

------------------------------------------

பிட்டகோட்டே ஜயரஜசிட்டி பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்ட நிர்மாணத்துக்காக ரூபா 619,276,616 ஒப்பந்தப் பெறுமதியில் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருடன் 2016 பெப்ரவரி 15 ஆம் திகதி உடன்படிக்கையில் கைசாத்திட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 27,867,447 தொகையான கட்டணத்தின் கீழ் ஆலோசனை கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன். கட்டிட நிர்மாணத்தின் போது அதன் கட்டமைப்பு திட்டத்தில் காணப்பட்ட பொருன்மையான வழுக்களின் காரணமாக கட்டிடத்தின் அடியிலும் மற்றும் தூண்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டமையினால் நிர்மாணங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் பின்னர் 2018 செப்டம்பர் 10 ஆம் திகதியளவில் ஒப்பந்தகாரர் வேலைத்தளத்தை கைவிட்டு சென்றிருந்தார். அந்த திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை முன் கொண்டு செல்வதற்கு முடியாத நிலைமையின் அடிப்படையில் வேலைகளை கைவிடுவதற்கு 2019 பெப்ரவரி 14 ஆம் திகதி பொதுச்சபை தீர்மானித்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) கட்டமைப்பு திட்டத்தின் வழுவின் காரணமாக செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் போது அதற்குரிய ஆலோசனை கம்பனியின் கட்டணத்திற்காக 95 சதவீதமான ரூபா 26,381,183 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த பெறுமதியில் 20 தவீதமான முற்பணத்தொகை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட 06 பட்டியல்களின் பெறுமதியை உள்ளடக்கிய ரூபா 229,326,280 தொகையான வரியுடன் கூடிய தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு செலவாகி உள்ள மொத்த பெறுமதியையும் அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆலோசனை நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்ட 2015 மார்ச் 10 ஆம் திகதி முதல் செயற்திட்டத்தை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட 2016.01.04 ஆம் திகதி வரையான 10 மாத காலத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தொகையில் 68 |

| | | | |
|---|---|---|---|
| | | | சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. 2016.01.04 ஆம் திகதி முதல் கட்டமைப்பில் ஏற்பட்ட வழுவின் காரணமாக செயற்திட்டம் நிறுத்தப்பட்டு 2017 மார்ச் வரையான 14 மாத காலத்தில் Contract Administration stage என்ற கட்டத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள 30 சதவீதமான கட்டணத்தில் 23 சதவீதம் மாத்திரம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டது. அதுவரை உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணத்தில் 92 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | செயற்திட்டம் வெற்றியடையாமைக்கான காரணமான ஆலோசனை நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா 26,381,183 தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஒப்பந்த கம்பனிக்கு செலுத்தப்பட்ட முற்பணத் தெகையை அறவிடுவதற்கும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 30,963,831 தொகையான செயலாற்றல் பிணைமுறி மற்றும் ரூபா 90,506,309 தொகையான முற்பணங்கள் 02 பிணைமுறிகள் காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாற்றல் பிணை முறி மற்றும் இரண்டு முற்பண பிணைகளின் காலநீடிப்புக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | இந்த செயற்திட்டம் முடிவடையும் வரை அதன் பழைய கட்டிடத்தில் உள்ள கடை உரிமையாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா | சபைக்கு செலவாகின்ற மேலதிக செலவினங்க | 2017 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் |

| | | |
|---|---|---|
| 6,780,000 தொகை இலங்கைப் போக்குவரத்து சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். | கட்டமைப்பு வழுக்களினால் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக துரிதமாக வழங்குவதற்கு ஏனைய நிலையமொன்று காணப்படாமையினால் 2018 ஆண்டிற்காகவும் கடை உரிமையாளர்களுக்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |

(இ) மொரகஸ்முல்ல 04 ஆவது ஒழுங்கை சிகிச்சை நிலையம் கட்டிடம் காணப்பட்ட காணியில் 18 அலகுகளை உடைய வீட்டுத்தொகுதிகளைக் கொண்ட நான்கு மாடி வீட்டுத் தொகுதி நிர்மாணம்.

---

| | | |
|---|---|---|
| மொரகஸ்முல்ல 04 ஆவது ஒழுங்கையில் காணப்பட்ட பழைய கட்டிடம் மற்றும் அதில் நடாத்திச் செல்லப்பட்ட பற்சிகிச்சை நிலையம், உடற்பயிற்சி நிலையம் மற்றும் நூலகம் என்பவற்றை உடைத்து அகற்றி அந்த இடத்தில் 18 வீட்டு அலகுகளைக் கொண்ட நான்கு மாடி வீடமைப்புத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 06 மாத காலத்தில் நிர்மாணங்களை கையளிப்பதற்கு ரூபா 69,704,581 ஒப்பந்தப் பெறுமதியில் தனியார் நிறுவனத்துக்கு 2016 யூன் 01 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | கட்டிடங்களில் இருந்து அகற்றப்பட்ட பொருட்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டு களஞ்சியங்களுக்கு கையளித்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அது தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். | பழைய கட்டிடம் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டமையால் பயன்படுத்தாது கைவிடப்பட்டிருந்தது. அதில் காணப்பட்ட பயன்படுத்தக் கூடிய பொருட்கள் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டிட பழுது பார்த்தல்களுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் கறையான் போன்ற எறும்பு உயிரினங்களினால் அழிவடைந்திருந்த பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (i) பழைய கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட தளபாடங்கள், ஓடுகள் பராளைகள் மற்றும் ஏனைய பெறுமதியான துணைப் பாகங்கள் அகற்றப்பட்ட முறை அல்லது பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பான சான்றுகள் காணப்படவில்லை. | | |
| (ii) சபையினால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 25,511,312 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மக்களின் பாவனைக்கு உரித்தாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் எந்தவொரு நபரும் அந்த பலனை பெறாதிருந்தமை, கட்டிடத்தின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமை நீர், மின்சாரம் போன்ற அத்தியவசிய அடிப்படை வசதிகள் வழங்கப்படாது இருந்தமை, ஒப்பந்தகாரர் அந்த வேலைகளை கைவிட்டு சென்றிருந்தமை மற்றும் சுற்றாடலுக்கு அண்மையில் புல் வளர்ந்து காணப்பட்டமை 2018 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரையில் வீட்டு உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்ட போதும் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக குடியிருப்பாளர்கள் அதில் குடியிருக்காமையினால் சபையின் நேர் ஊழிய முறையை பயன்படுத்தி செயற்திட்டத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து வீட்டு உரிமையாளர்கள் குடியிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

(ஈ) நானாயக்கார மாவத்தையில் நகர சபை வேலைப்பிரிவு வாகனப் பராமரிப்பு பிரிவு மற்றும் களஞ்சிய தொகுதி கட்டிட நிர்மாணித்தல்.

---

| | | |
|---|---|---|
| சபையினால் நகர சபை வேலைப்பிரிவு, வாகனப்பராமரிப்பு பிரிவு மற்றும் களஞ்சிய கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பதற்காக ரூபா 46,973,098 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் தனியார் நிறுவனத்துடன் 2014 ஆகஸ்ட் 27 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பெறுகை வழிகாட்டி கோவையின் 7.10(அ) இன் பிரகாரம் கேள்விதாரரின் முன்னைய தகைமைகளைப் | கேள்வி மதிப்பீட்டின் போது ஆகக் | கேள்வி தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலை, அனுபவம் |

| | | | |
|---|---|---|---|
| | பரிட்சித்தல் மற்றும் ஒப்பந்தத்தை ஆக்கபூர்வமாக நிறைவேற்ற முடியுமா எனவும் மற்றும் வளங்கள் உள்ளதா எனவும் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | குறைந்த விலைக்கு மேலதிகமாக<br><br>அவர்களின் இதற்காக சமமான வேலைகளை நிறைவேற்றும் அனுபவம் மற்றும் நிதி ரீதியான இயலுமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | மற்றும் இயலுமை தொடர்பாக மதிப்பீட்டினை செய்வதற்காக மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர், நகர கணக்காளர், நகர பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு வொன்றினால் உரிய தகைமைகள் மதிப்பீடு செய்யப்பட்டு கேள்வி தாரர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டு குழுவின் அறிக்கைக்காக பொது சபையின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. |
| (ii) | ஒப்பந்தகாரரால் 2014 ஆகஸ்ட் 11 ஆம் திகதி உக்குவல சணச வங்கியிலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 2,348,653 தொகையான செயலாற்றல் பிணைமுறி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த வங்கி இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியாக இருக்கவில்லை. | உடன்படிக்கைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கிகளிலிருந்து மாத்திரம் பிணை பெற்றுக்கொள்ளல் வேண்டும். | செயலாற்றல் பிணைமுறி பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி இலங்கை மத்தியில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றாக இருந்த போதும் ISO 9001 – 2000 Certificate இலக்கம் QSC 0281 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வங்கியாகும். |
| (iii) | அத்திவாரம் நிர்மாணிக்கும் மட்டத்தின் போது கட்டிட திட்டத்தில் உள்ளடக்கப்படாத வேலைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 2,576,329 தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை திட்டமிடும் போது காணியின் மண் பரிசோதனை, | வேலைகளை மேற்கொள்வதுடன் வெளித்தரப்பினரால் நிர்மாணங்களுக்கு எதிர்ப்பு மற்றும் ஒப்பந்தகாரர், வேலை செய்கின்றவர்களின் |

| | | |
|---|---|---|
| | கட்டிடத்தின் அடிப்பகுதியின் அளவு சரியாக திட்டமிடப்படாமை மற்றும் வங்கி பிணைமுறி காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்கி சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை குறைத்துக் கொள்ளுதல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அச்சுறுத்தல் ஏற்பட்டமையினால் பொலிஸுக்கு முறைப்பாடு செய்ததன் பின்னர் தற்காலிகமாக வேலை நிறுத்தப்பட்டிருந்தது. ஆரம்ப கட்டிடத்துக்கு பதிலாக உள்ளக விளையாட்டு அரங்கம் ஒன்றை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (iv) 2015 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 20 சதவீத முற்பணம் மற்றும் அத்திகதியில் ஆற்றிய வேலைக்காக ரூபா 17,651,987 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது வேலை கைவிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 11,743,270 பெறுமதியான 02 வங்கிப் பிணைகள் காலாவதியாவதற்கு முன்னர் 04 மாத காலங்கள் காணப்பட்ட போதிலும் அதனைப் பணமாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த வேலைக்காக செலவிடப்பட்ட ரூபா 17,651,987 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. அத் திகதியில் சபையினால் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 6,183,416 ஆகும். | | |

(உ) வெலிக்கட பொலிஸிற்கு அருகிலுள்ள காணியில் புதிய நகரசபைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்.

---

| | | |
|---|---|---|
| வெலிக்கட பொலிஸிற்கு அருகில் அமைந்துள்ள சபைக்குரிய காணியில் புதிய நகர சபை அலுவலக கட்டிடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்குரிய கட்டிட நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 36,010,657 தொகையான கட்டணத்தின் கீழ் ஆலோசனைக் கம்பனி ஒன்றுடன் 2015 சனவரி 26 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு ரூபா 22,220,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 மே 07 ஆம் திகதிய சபை தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட தீர்மானங்கள் தற்போது காணப்பட்ட சபை வளவில் நிர்மாணிப்பதற்காக ஆலோசனைக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டடிருந்ததுடன் அதற்காக ரூபா 4,000,000 தொகை செலுத்தப்பட்ட போதும் 2018 திசெம்பர் 31ஆம் திகதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. சபையிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 15,138,788 தொகையை அறவிடுவதற்காக ஆலோசனைக் கம்பனியால் சபைக்கு எதிராக பிரச்சினைகளைத் தீர்க்கும் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்ததுடன் அதாற்கான வழக்குக் கட்டணமாக ரூபா 259,000 செலவிடப்பட்டிருந்தது. அதனால் இந்த ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 26,479,340 தொகை பயனற்ற செலவினமாக உட்பட்டிருந்தது. | பாரிய அளவிலான வேலைகளுக்கான நிர்மாணங்களுக்கு முன்னர் இடம் குறிப்பாக தீர்மானிக்கப் பட வேண்டி இருந்ததுடன் அதற்காக ஏற்படுகின்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தேசிக்கப்பட்ட புதிய நகர சபை அலுவலகம் பொலிஸிற்கு அருகிலுள்ள காணியில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் சிறிய புகையிரத விதி மற்றும் இராஜகிரிய வான் பாலம் இந்த காணிக்கு அருகில் திட்டமிடப்பட்டிருந்தமையினால் அந்தக் காணியில் வணிகப் பெறுமதி அதிகரித்துச் செல்லும் காரணத்தை கருத்தில் கொண்டு நகர சபை தற்போது காணப்படுகின்ற காணியில் புதிய நகர சபைக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2015.05,07 ஆம் திகதி பொதுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. காணியின் மாற்றங்களை கவனத்தில் கொண்டு பொருத்தமான பிரகாரம் மாற்றங்களைச் செய்து புதிய திட்டத்தை தயாரிக்குமாறு ஆலோசனைக் கம்பனிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் கட்டணத்தில் அதில் 0.51 வீதம் மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் |

| | | |
|---|---|---|
| | | பின்னர் ஆலோசனைக்கட்டணமாக ரூபா 40 இலட்சம் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மிகுதிக் கொடுப்பனவுகள் செய்யப்படாமையின் காரணமாக அந்த நிறுவனம் பிணக்குகள் தீர்த்தல் வழக்கொன்றை தொடுத்திருந்தது. |

(ஊ) ஜனஜயசிட்டி செயற்திட்டம்

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| சபையினால் ரூபா 1,687,986,224 ஒப்பந்த பெறுமதியில் 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தனியார் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 1,801,168,022 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுப்பனவில் உள்ளடங்கிய ரூபா 113,181,798 தொகையான நிகழத்தக்க மற்றும் மேலதிக வேலை தொடர்பாக பெறுகை வழிகாட்டி கோவையின் 8.13.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் 2018 ஒகதோபர் 12 ஆம் திகதி வரையில் ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, பூர்த்தி செய்யும் சான்றிதழ் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் சபையினால் கட்டிடத்தில் குறைபாடுகள் காணப்படும் போது அந்த கடைகளின் திறப்புக்கள் 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதி கடை உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் சான்றிதழ் ஒப்பந்தகாரரிடமிருந்து பெறப்பட வேண்டும். | 2018 யூன் 30 ஆம் திகதி நவலோக கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் கம்பனியால் வேலை பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் ஜனஜயசிட்டி சுபிரி சந்தை தொகுதியின் ஒவ்வொரு மாடிகளுக்காகவும் தனித்தனியாக திறப்புக்கள் இந்த சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தந்த மாடிக்காக 2018.10.12 ஆம் திகதி முதல் உரிய கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சபையினால் ஜனஜயசிட்டி செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதியாக ரூபா 1,687,986,244 தொகைக்கு 2014.08.01 ஆம் திகதி நவலோக நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்ருந்தது. அதன் பின்னர் |

| | | |
|---|---|---|
| | | செலவான நிகழத்தக்க மற்றும் மேலதிக வேலைகள் தொடர்பாக 2019.02.07 ஆம் திகதி பௌதிக திட்டமிடல் வேலைகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான 62.29 ஆம் இலக்க பரிந்துரை மற்றும் 2019.02.14 ஆம் திகதியின் பொதுக்கூட்ட தீர்மானத்தின் இலக்கம் 06.01 இன் கீழ் ரூபா 281,905,884 தொகைக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமையை தயவுடன் அறியத்தருகின்றோம். |

### 3.7.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 442,459,154 தொகையான பொருட்பதிவேட்டு பொருட்கள் தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | தற்போது பொருட்பதிவேட்டு பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்படுகின்றது. உரிய மெய்மையாய்வு அறிக்கை எதிர்வரும் நிலையியற் குழு மற்றும் பொதுச்சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 தீர்க்கப்படாதுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 229,326,280 தொகையான கணக்காய்வு ஐய வினாவிற்காக பதிலளிக்கப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக தாமதமின்றி பதிலளிக்கப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்காக விரைவாக உங்களுக்கு பதில் சமர்ப்பிக்கப்படும். |